[illegible]

Q7:4146
N 30
186207

4

359

யானூர்

அன்வாருஸ்ஸலாத்து என்னும்

தொழுகையின் ஜோதி.

இஃது

திண்டுக்கல் தாலூகா பிலாத்து கிராமம்
புலவர் S. நூர் இஸ்மாயீல் சாஹிபு
அவர்கள் குமாரர்
போர்டுஸ்கூல் உருதூ முன்ஷி
P. N. சையது அலி நூரி சாஹிப்
அவர்களா லியற்றியதை

நத்தம், பா. வெள்ளையப்ப ராவுத்தர்
அவர்கள் பாரியாகிய
தங்கம்மாள் பீவியின்
பொருளுதவியால்

மதுரை, ஸ்ரீ ஜெகதாம்பாள் பிரஸில்,
பதிப்பிக்கப்பெற்றது.

விலை] 1930. [அணா-5

JUL 1930

22 JUL 1930

முகவுரை.

பிஸ்மில்லா ஹிர்ரஹிமா னிர்ரஹீம்.

அல்ஹம் துலில்லாஹிரப்பில் ஆலமீன். வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா ஸையதில் முர்ஸலீன்வஅலா ஆலிஹிவ. அஸ்ஹாபிஹி அஜ்மஈன் எல்லா புகழும் சர்வ வல்லமையுள்ள பராபரக் கடவுளாகிய பாக்பர் வர்திகாரென்னும் சுத்தசைதன்யம் வாய்ந்த அல்லாஹ் ஜல்லஜலாலஹு வத்தஆலாவுக்கே உரியது. இன்னும் சலாத்தென்னும் கருணையும் சலாமென்னும் ஈடேற்றமும் நமது கல்விக்கடலான கஸ்தூரி உடலான மகுரிபத்துமெடலான முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹி சல்லம் அவர்கள் பேரிலும் இன்னுமவர்களின் பந்துமித்திரர்கள் பேரிலும் மற்றும் சர்வ முஸ்லிம் ஆண் பெண்களின் மீதிலும் உண்டாவதாகவும். ஆமீன்.

அறிந்துகொள்ளுங்கள் எனதன்பார்ந்த ஆத்ம சகோதரர்களே! தற்காலத்தில் அநேக முஸ்லீம் ஜனங்கள் நமது சிறப்பாகிய இஸ்லாம் மார்க்கத்தின் முக்கிய கடமையான தொழுகையின் பருளு, வாஜிப், சுன்னத்து, முஸ்தஹப்பு, மக்ரூஹ், ஹராம், பாத்தில் முதலியவற்றையும் மேற்படி தொழுகையில் ஓதக்கூடிய வாக்கியங்களின் பொருள்களையும் அறியாது தொழுகின்றனர். அன்னவர்களின் வணக்கத்தைக் கவனிப்போமாயின் உயிரற்ற உடலுக்குச் சமானமாகும். ஆகையால் அத்தொழுகையின் விஷயமாக அநேக புஸ்தகங்களிருப்பினும், அதிமுக்கியமான விஷயங்களுடன் அதின் சட்டதிட்டங்களும் இன்னுமதில் சதா ஓதக்கூடிய தனு, சூரா, தஸ்பீஹ், தக்பீர், தம்ஜீத், குனூத்து அத்தஹியாத்தும் சில சூராக்களின் பொருள்களும் மற்றவைகளின் அருத்தங்களும் எளிதில் அறிந்துகொள்ளும்பொருட்டு இச்சிறுநூலை இயற்றினேன் இதைப் படிப்பவர்கள் இதன்படி அமல்செய்வார்கள் என்று வல்ல இறைவனை சதா பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளுகிறேன். இதில் சொற்பிழை, எழுத்துப்பிழை உண்டாயின் திருத்தி வாசிப்பதோடு இதை இயற்றினவன் மீதும் இதை அச்சிடப் பொருள் சஹாயம் செய்தவர் மீதும் துஆ செய்யவேணுமாயும் தயவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

P. N. S.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
186207
சென்னை-600 008

|

யானூர்

அன்வாருஸ்ஸலாத் என்னும்

தொழுகையின் ஜோதி.

ஒளூவின் பயன்.

ஒளூவின் பருளுகள் 4.

1. நெற்றி ரோமத்தின் அருகுமுதல் மேவாயின் கீழ்வரையிலும் ஒரு காதுமுதல் மறுகாதுவரை கழுவுவதும்

2. இருகைகளையும் முழங்கை மொழிஉள்பட கழுவுவதும்.

3. தலையில் நாலிலொருபங்கு தண்ணீரால் மஸஹு செய்வதும்.

4 இரு பாதங்களையும் கரண்டைமொழியுள்பட கழுவுவதும் பருளாகும் இவ்வுருப்புகளில் ஒரு ரோமமளவு நனையாவிட்டால் ஒளூவு கூடாது. எந்த மட்டும் தண்ணீர் படவில்லையோ அந்தமட்டும் கழுவினால் ஒளூ துருஸ்தாகிவிடும்.

ஒளூவின் சுன்னத்துகள் 13.

1. ஒளூ செய்வதாய் நிய்யத்துச் செய்வதும்.

2 இரண்டு கைகளையும் மணிக்கட்டுவரை கழுவுவதும்.

3 ஒளுச்செய்ய துவக்கும்போது பிஸ்மில்லாஹ் சொல்லுவதும்.

4. மிஸ்வாக்கைக்கொண்டு பல் துலக்குவதும்

5. வாய் கொப்பளிப்பதும்.

6. நாசிக்குத் தண்ணீர் செலுத்துவதும்

7. ஒவ்வொரு உருப்பையும் மூன்று தடவை கழுவுவதும்

8. தர்த்தீப் என்னும் செய்யவேண்டிய முறைப்படி செய்வதும்

9. தொடர்ச்சியாக கழுவுவதும் அதாவது ஒரு உருப்பு காயுமுன் மறு உருப்பை கழுவுவதும்

10. விரல்களைக் கோதிக் கழுவுவதும்

11. அடர்ந்த தாடியைக் கோதிக் கழுவுவதும்

12. தலை முழுதும் மஸஹு செய்வதும்

13. காதுகளை மஸஹு செய்வதும்

இந்த 13 காரியங்கள் சுன்னத்தாகும். இந்தச் செயல்களில் ஒன்று விட்டுப்போகுமானால் மக்ரூஹ் ஆகிவிடும்.

ஒளுவின் மக்ரூஹ்கள்.

---

1. அசுத்த இடத்திலிருந்து ஒளுச் செய்கிறதும்

2. ஒளுச் செய்யும்போது உலக சமாச்சாரங்களைப் பேசுவதும்

3. முகம் கழுவும்போதும் கண்களை அழுத்தமாக மூடிக் கொள்வதும்

4. தண்ணீரை மிகுதியாக செலவு செய்வதும்

5. முகத்தை தண்ணீரால் பலமாக அடிப்பதும்

6. இடதுகையைக்கொண்டு வாயிக்கும் நாசிக்கும் நீர் செலுத்துவதும்

7. வலதுகையைக்கொண்டு மூக்கை சுத்தம் செய்வதும் மக்ரூஹாகும்.

ஒளுவின் முஸ்தஹப்புகள் 8.

---

1. ஒளு செய்பவர் கிப்லா பக்கம் முகத்தைத் திருப்பிக் கொள்வதும்

2. சற்று உயர்ந்த இடத்திலிருந்துகொள்வதும்

3. உருப்புகளை கழுவும்போது பிஸ்மில்லாஹ் அல்லது ஷஹாதத்துக் ககலிமா ஓதுவதும்

4. வலது உருப்புகளைக் கழுவ ஆரம்பிப்பதும்

5. பிடரிக்கு மஸஹு செய்வதும்

6. தொழுகையின் வக்த்து வருமுன் ஒளுச்செய்வதும்

7. மற்றவர்களின் உதவியன்றி ஒளுச் செய்வதும்

8. ஒளு செய்து முடிந்தபின் துஆ வுடன் சொற்ப ஜலம் குடிப்பதும் முஸ்தஹப்பாகும்.

ஒளுவின் முறிச்சல்கள் 9.

1. முன் துவாரம் பின் துவாரத்திலிருந்து எதாவது வெளியானாலும்

2. புண் காயங்களிலிருந்து இரத்தம், சீழ், சலம், அசுத்த நீர் வடிந்தாலும்

3 தன்னை மறந்து நித்திரை கொண்டாலும் ஒரு வஸ்துவின் மீது சாய்ந்து உறங்கினாலும்

4. வாய் நிறைய வாந்தி எடுத்தாலும்

5. மதிமயக்கம் உண்டானாலும்

6. லாகிரி வஸ்தைக்கொண்டு போதையானாலும்

7. பைத்தியமானாலும்

8. இரண்டு வெள்க ஸ்தானங்கள் ஒன்றோடொன்று சேர்ந்தாலும்

9. ஜனஸா தொழுகையைத் தவிர மற்ற தொழுகையில் வெடி சிரிப்பு சிரித்தாலும் ஒளு முறிந்துவிடும்.

---

3 காரியம் ஒளுவில்லாதவர்கள் செய்தல் ஹராமாகும்:

---

(1) தொழுகிறதும், (2) குர்ஆன்ஷரீபை தொடுவதும் (3) கஃபாவை தவாபு செய்வதுமாகும்

ஒளுச்செய்யும் விதம்,

முதலில் இரண்டு கைகளையும் மூன்றுதடவை மணிகட்டு வரை பிஸ்மில்லா சொல்லிக் கழுவிக்கொண்டு பிறகு பற்களை சுத்தம் செய்து மூன்றுதடவை வாய் கொப்பளிக்கவேண்டும், வாய் கொப்பளிக்கும்போது நோன்பில்லாதவர்கள் கர்கரா செய்யவேண்டும். பின்பு வலதுகையில் மூன்றுதடவை நாசிக்கு நீர் சேலுத்தி இடது கையால் நாசியை சுத்தம்செய்யவேண்டும். பின்பு மூன்று தடவை முகத்தை கழுவவும், கழுவும்போது கண்ணிமைகளையும் புருவத்தையும் நன்ருகத்தேய்த்தும் அடர்ந்த தாடி உண்டாயிருந்தால் அதை கோதியும் கழுவிக்கொண்டு பிறகு வலதுகையை முந்தியும் இடது கையை பிந்தியுமாக இரண்டு கைகளையும் முழங்கை மொழிஉள்பட கழுவி பின்பு இரண்டு கைகளையும் தண்ணீரில் நனைத்துக்கொண்டு பெருவிரல்களையும் கலிமா விரல்களையும் உயர்த்திக் கையுடன் மற்ற விரல்களைக்கொண்டு நெற்றிமுதல் பிடரிவரையிலும் இழுத்து அப்படியே முன் பக்கம் கோண்டுவந்து மஸஹு செய்து பின்பு கலிமாவிரல்களால் இரு காதிற்கு உள்ளிலும் பெரு விரல்களால் காதுக்கு வெளியிலும் பிறகு கைவிரல்களுடைய முதுகைக்கொண்டு பிடரியையும் மஸஹுசெய்து முடித்து கடைசியாக இரண்டு பாதங்களையும் கரண்டை உள்பட வலதுகாலை முந்தியும் இடதுகாலை பிந்தியுமாக கால் விரல்களைக் கோதிக் கழுவி ஒளுவை முடிக்கவேண்டும்.

தயம்மத்தின் பயன்.

தண்ணீர் சுமார் $1\frac{1}{2}$ மையில் தூரத்திலிருந்தாலும் அல்லது வியாதியால் தண்ணீரானது தேகத்தை அசெளகரியப்படுத்தினாலும் அல்லது துஷ்டமிருகங்களின் பயமிருந்தாலும் அல்லது பெருநாள் தொழுகை அல்லது ஜனசா தொழுகை கிடைக்காதென்

று எண்ணமுண்டானாலும் இக்காரணங்களால் ஒளுவிற் குபகாமாக தயம்மம் செய்துகொள்ளலாம்.

தயம்மத்தின் பருளுகள் 3.

---

1. சிறு துடக்கு பெருந்துடக்கு என்னும் அசுத்தத்தை நீக்குவதற்காக நான் தயம்மம் செய்கிறேன் என்று நிய்யத்துச்செய்வதும்.

2 இருகைகளால் முகத்தை தடவுவதும்.

3. இருகைகளையும் முழங்கை மொழி உள்பட தடவுவதும் பர்ளாகும்.

தயம்மம் செய்யுமுறை.

சுத்தமான மண்ணில் இருகரங்களையும் சற்று விரித்துக்கொண்டு அடித்து முன்னும் பின்னுமாக இழுத்து எடுத்துக்கொண்டு கையோடுகையை பின்புறமாக தட்டிக்கொண்டு முகமுழுவதும் ஓர் ரோமம் அளவும்விடாமல் தடவிக்கொண்டு மறுபடியும் முன்போல இருகைகளையும் அடித்து எடுத்துப் பின் இடதுகையின் நான்கு விரல்களையும் வலதுகையின் பின்புறத்து விரல்களின் நுனிமுதல் முழங்கைவரை இழுத்து மேற்படி இடதுகை உள்புறத்தை மறுபுறமாக தடவி இடதுகை பெருவிரலை வலதுகைப் பெருவிரலின் மீது தடவுவதும் இதுபோலவே வலதுகையால் இடதுகையையும் தடவிக்கொள்ளவேண்டியது.

ஒளுவிற்காக செய்யும் தயம்மமும் முழுக்கிற்காகச்செய்யும் தயம்மமும் ஓரே விதமாகும். ஆனால் இன்ன விஷயத்திற்காக தயம்மம் செய்கிறேன் என்னும் நிய்யத்தும் அதிலுண்டாகவேண்டும்.

ஒளுவை முறிக்கும் காரியங்கள் அனைத்தும் தயம்மத்தை முறித்துவிடும். ஆனால் ஒளுவிற்கு போதுமான தண்ணீர் கிடைத்தாலும் வியாதி சொஸ்தமானாலும் துஷ்டமிருகங்கள் நீங்கிவிட்டாலும் தயம்மம் முறிந்துவிடும். மஸ்அலா—தயம்மம் செய்துகொண்டு தொழுகும் இமாமை ஒளுச்செய்தவர்கள் பின்துடர்ந்து தொழுவது ஜாய்ஸாகும்.

முழுக்கின் பயான்.

ஒருவன் தூங்கி யெழுந்த பிறகு தேகத்திலாவது உடையிலாவது சொர்ப்பனத்தால் ஈரத்தைக் கண்டாலும் ஆசையுடன் இந்திரியம் குதித்து வெளியானாலும் பெண்களின் ஹைஸ் என்னும் மாதவிடை நின்றுவிட்டாலும் நிபாஸ் என்னும் பிள்ளை பிறப்பின் தீட்டு நின்றுவிட்டாலும் முழுக்கு விதியாகிவிடும். இன்னும் சையோகத்தால் ஆண், பெண் இருவர்கள் பேரில் முழுக்கு விதியாகிவிடும்.

முழுக்கின் பருளுகள் 3.

---

1. வாய் கொப்பளிப்பதும்.

2. நாசிக்கு நீர்செலுத்துதலும்,

3. தேகம் அடங்கலும் நனையக் குளித்தலும் பர்லாகும். தேகத்தில் ஒரு ரோமமளவு நனையாவிட்டால் முழுக்கு கூடாது. ஆனால் சிலபாகம் நனையாமல் இருந்தால் பின்பு அந்தப்பாகத்தை மட்டும் தண்ணீரால் கழுவிக்கொண்டால் துருஸ்தாகிவிடும்.

முழுக்கின் சுன்னத்துகள் 5.

1. முழுக்கை நீக்குவதற்காக ஸ்நானம் செய்கிறேன் என்று நிய்யத்துச்செய்வதும்.

(2) வெட்க ஸ்தானத்தை கழுவுவதும்.

(3) தேகத்திலாவது உடையிலாவது நஜிஸ் பட்டிருந்தால் அதை சுத்தம்செய்வதும்.

(4) ஒளுச்செய்து கொள்வதும்.

(5) தண்ணீர் ஊற்றிக் குளிக்கும்போது வலது தோள் இடதுதோள் தலை இவைகளின் பேரில் மூன்று தடவை தண்ணீர் ஊற்றிக்கொள்வதும் சுன்னத்துகளாகும்.

முழுக்காளிகள் செய்யக்கூடாத காரியங்கள் 5.

(1) தொழுகிறதும்.

(2) குர்ஆன்ஷரீபை தொடுவதும்.

(3) குர்ஆன்ஷரீபை ஓதுவதும்.

(4) மஸ்ஜிதுக்குள் நுழைவதும்.

(5) கருபாவை (தவாப்பு) சுற்றுவதும்.

மாதவிடையான அல்லது பிள்ளைபிறந்த தீட்டு உள்ள பெண்கள்மேல் உரைத்த ஐந்து காரியத்துடன் புருஷரோடு சையோகம் செய்வதும் நோம்பு பிடிப்பதும் ஆக ஏழு காரியங்களும் ஹராமாக இருக்கும்.

தொழுகையின் நேரங்கள்.

---

(1) பஜ்ரு - கிழக்கு வெளுத்தது முதல் சூரியன் உதயமாகும் வரையிலாக இருக்கும்.

(2) லுஹர் - சூரியன் உச்சியில் வந்து அடிச்சாய்ந்தது முதல் ஒருவஸ்துவின் நிழல் தன் அசல் நிழலைத்தவிர அவ்வஸ்துவின் நிழல் இரண்டு பங்கு ஆகும் வரையிலா இருக்கும்.

(3) அஸர் - லுஹருடைய நேரம் சென்றது முதல் சூரியன் அஸ்தமனமாகும் வரையிலா இருக்கும்.

(4) மக்ரிப் - சூரியன் அடைந்தது முதல் செவ்வானம் மறையும் வரையிலா இருக்கும்.

(5) இஷா - செவ்வானம் மறைந்தது முதல் மெய் வெள்ளை என்னும் கிழக்கு வெளுக்கும் வரையிலாக இருக்கும்.

சூரியன் உதிக்கும் போதும், சூரியன் உச்சியிலிருக்கும் போதும், சூரியன் அஸ்தமனமாகும்போதும், தொழுகிறது ஹராமாக இருக்கும்.

அதானின் பயான்.

பாங்கு சொல்வது ஆண்களுக்கு சுன்னத்தாக இருக்கும் கலாவான தொழுகையை தொழுகும்போதும், பாங்கு சொல்லிக் கொள்ளுவது சுன்னத்தாக இருக்கும்.

பாங்கு சொல்லும் விபரம்.

அல்லாஹ் அக்பர் என்று நான்கு தடவையும் அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு என்று இருமுறையும், அஷ்ஹது அன்னமுஹம்மதர் ரசூலுல்லாஹ் என்று இருமுறையும், ஹய்ய அலஸ்ஸலாத் என்று இருமுறையும், ஹய்ய அலல்பலாஹ் என்று இருமுறையும், அல்லாஹு அக்பர் என்று இருமுறையும், லாயி லாஹ இல்லல்லாஹ் என்று சொல்லி முடிக்கவேண்டும். ஆனால் பஜ்ரில் மட்டும் ஹய்ய அலல்பலாஹுக்குப் பின் அஸ்ஸலாத்து கைருன் மினன் நௌம் என்று இருமுறை சொல்லவேண்டும். இன்னும் ஹய்ய அலஸ்ஸலாத் என்று சொல்லும்போது வலது பக்கமும் ஹய்ய அலல்பலாஹ் என்று சொல்லும்போதும் இடதுபக்கமும் முகத்தை மட்டும் திருப்பவேண்டும்.

மஸ்அலா - இரண்டு பெருநாளின் தொழுகைகளுக்கும் பாங்கும் இக்காமத்தும் சொல்லுவது கூடாது.

மஸ்அலா - ஒருவருக்கு பலநோத்து தொழுகைகள் தவறிப் போய் அதை கலாச்செய்யும்போது முந்தினநோத்து தொழுகைக்கு மட்டும் பாங்கும் இக்காமத்தும் சொல்லிக்கொண்டும் மற்றதொழுகைகளுக்கு இக்காமத்து மட்டும் சொல்லிக்கொண்டு தொழுதால் போதுமானது.

தொழுகையின் பயான்.

தொழுகையின் பருளுகள் 13.

---

(1) தொழுகையின்நோத்தை அறிந்து கொள்ளவேண்டும்.

(2) தேகம் சுத்தமாக இருக்க வேண்டும்.

(3) உடைகள் சுத்தமாக இருக்க வேண்டும்.

(4) தொழுகுமிடம் சுத்தமாக இருக்க வேண்டும்.

(5) அவ்ரத்தை மறைக்க வேண்டும். அதாவது ஆண்கள் தொப்புளிலிருந்து முழங்கால்வரையும் பெண்கள் முகமும் இரண்டு முன் கையும் இரண்டு பாதங்களும் தவிற மற்ற எல்லா தேகத்தையும் மறைப்பதாகும்.

(6) கிப்லாவின் திசையில் முகத்தை ஆக்கிக் கொள்ள வேண்டும்.

(7) நிய்யத்துச் செய்யவேண்டும். அதாவது மனதில் இன்ன தொழுகையை தொழுகிறேனென்று எண்ணிக்கொள்ள வேண்டும்.

(8) தக்பீர் தஹ்ரீமாச் சொல்லவேண்டும்.

(9) நிலைநிற்க வேண்டும் அதாவது பர்ளு தொழுகைகளிலும் வாஜிபான தொழுகைகளிலும் பஜ்ரின் சுன்னத்திலுமேயாம்.

(10) கிராஅத்து குர்ஆன் ஆயத்துகளை ஓதவேண்டும்.

(11) ருக்கூஉ செய்யவேண்டும்.

(12) ஸஜ்தா செய்யவேண்டும்.

(13) தொழுகையின் கடைசி இருப்பில் உட்காரவேண்டும்.

இந்த 13 பர்ளுகளைத்தவிர (1) தொழுகவேண்டிய முறையின்படி தொழுகிறதும் (2) தொழுகையை விட்டு ஞாபகமுடன் நீங்கிக்கொள்ளுவதுமாகிய இந்த இரண்டையும் சில இமாம்கள் பருளு என்று சொல்லுகிறார்கள். எவர்கள் மேற்கூறிய பருளுகளில் ஒன்றேனும் விட்டுவிடும் பட்சத்தில் தொழுகை கூடாது. திருப்பி தொழுவது கடமையாக இருக்கும்.

தொழுகையின் வாஜிப்கள்

(1) முந்தின தக்பீர் தஹ்ரீமாவில் அல்லாஹ் வென்னும் வாக்கியத்தோடு அக்பர் என்று சேர்த்துச் சொல்லுவதும்.

(2) அல்ஹம்து சூரா ஓதுவதும்.

(3) ஒவ்வொரு ரக்அத்திலும் அல்ஹம்தை சூராவுக்கு முன் ஓதுவதும்.

(4) அல்ஹம்துக்குப்பின் சூரா ஓதுவதும் அதாவது பெரிய ஆயத்தாக இருந்தால் ஒரு ஆயத்தும் சிறிய ஆயத்தாக இருந்தால் மூன்று ஆயத்துகள் ஓதுவதும்.

(5) அல்ஹம்தை முந்தின இரண்டு ரக்அத்தில் குறிப்பாக்குவதும்.

(6) மெதுவாக ஓதவேண்டிய இடத்தில் மெதுவாக ஓதுவதும்.

(7) இரைந்து ஓதவேண்டிய இடத்தில் இரைந்து ஓதுவதும்.

(8) இமாமை தொடர்ந்தவர்கள் வாய் மூடி கிராஅத்தை கேட்பதும்.

(9) மூன்று அல்லது நான்கு ரக்அத்துடைய தொழுகையில் இரண்டாவது ரக்அத்தில் உட்காருவதும்.

(10) முன்னிருப்பு பின்னிருப்புகளில் அத்தஹிய்யாத்து ஓதுவதும்.

(11) ருக்கூயிலும் ஸஜ்தாவிலும் சிறுநிலையிலும் சிறு இருப்பிலும் ஒரு தஸ்பீஹின் அளவு தாமதித்திருப்பதும்.

(12) ஒவ்வொரு பருளையும் அந்தந்த இடங்களில் செய்து முடிப்பதும்.

(13) ஒவ்வொரு வாஜிபையும் அந்தந்த இடத்தில் (தர்த்தீபு) முறையாக செய்வதும்.

(14) பருளான தொழுகையில் முந்தின இரண்டு ரக்அத்தில் மட்டும் அல்ஹம்துடன் சூரா ஓதுவதும்.

(15) இமாம் எச்செயல் செய்வாரோ அச்செயலில் பிந்தி வருபவர்கள் தொடர்வதும்.

(16) ஸஜ்தாதிலாவத்து செய்வதும் அதாவது குர்ஆன்ஷரீபில் 14 ஸ்தலங்களில் வருகிற வாக்கியத்தை ஓதினவரும் அதை கேட்பவர்களும் சஜ்தா செய்வதாகும்.

(17) வித்ரு தொழுகையில் துஆ குனூத்தோதுவதும்.

(18) இரண்டு பெருநாள் தொழுகைகளில் அதிகமான ஆறு தக்பீர்கள் சொல்லுவதும்.

(19) மேற்படி தொழுகையின் இரண்டாவது ரக்அத்தில் ருக்கூஉக்கு முன் தக்பீர் சொல்லுவதும்.

(20) சலாம் என்னும் வாக்கியத்தைச் சொல்லுவதும்,

(21) ஸஜ்தாசஹ்வு செய்வதும்.

ஆகிய இந்த இருபத்தி ஒன்றில் ஒன்றேனும் விட்டுப் போகுமானால் திருப்பித் தொழுவது வாஜிபாகும். சஜ்தா சஹ்வு என்பது கடைசி இருப்பில் அத்தஹிய்யாத்தில் வாசூலுஹூவரை ஓதி வல்துபக்கப் ஸலாம் கொடுத்து மறுபடி இரண்டு ஸஜ்தா செய்து பின்பு அத்தஹீய்யாத்தும் ஸலவாத் இபுராஹீமும் துஆயே மாதூராவும் ஓதி இருபக்கமும் ஸலாம் கொடுப்பதாகும்.

மஸ்அலா ஸஜ்தா சஹ்வு ஏற்பட்டு செய்யாவிட்டால் தொழுகையை திருப்பித் தொழுவது வாஜிபாகும். ஆனால் இமாமை

தொடர்ந்தவர்களுக்கு வாஜிப் விட்டுப்போனால் ஸஜ்தாஸஹ்வு செய்யவேண்டியதில்லை.

மஸ்அலா பெருநாள் தொழுகையிலும் ஜும்ஆ தொழுகையிலும் வாஜிப்கள் விட்டுப்போமானாலும் ஸஜ்தாசஹ்வு செய்யவேண்டிய தேவை இல்லை.

மஸ்அலா தனித்து தொழுபவர் முந்தின இருப்பில் இராமல் எழுந்துவிட்டால் நேரே நிற்பதற்கு முன் ஞாபகம் வந்தால் உடனே உட்காரவேண்டும். இப்படி ஞாபகமில்லாமல் நேரே நின்று விடுவானானால் உட்காராமல் கடைசியில் சஜ்தாசஹ்வு செய்யவேண்டும். ஆனால் பருளான தொழுகையில் நேரே நின்ற பிறகு ஞாபகம் வந்து மறுபடி இருப்பில் உட்காருவானானால் தொழுகை (பஸாதாகி) முறிந்துவிடும்.

சுன்னத்தான தொழுகைகளில் இவ்விதம் ஏற்பட்டால் 3வது 5வது ரக்அத்துகளின் சஜ்தா செய்யுமுன் ஞாபகம் வந்துவிடுமாயின் உட்கார்ந்துகொள்ளவேண்டும். ஆனால் கடைசியில் ஸஜ்தா சஹ்வு செய்துகொள்ளவேண்டியது.

ஸஜ்தாஸஹ்வு வாஜிபாகும் விஷயங்கள்.

அத்தஹிய்யாத்தில் ஒரு வாக்கியம் விட்டுப்போனாலும் அந்த ஹிய்யாத் தோதுமிடத்தில் வேறு சூஆகளை ஒதினாலும் அல்லது அத்தஹிய்யாதிற்கு முன் குர்ஆனில் ஏதாவது ஒதினாலும் அல்ஹம்திற்கு பிறகு அத்தஹிய்யா தோதினாலும் அல்லது அத்தஹிய்யாத்திற்கு பதிலாக சலவாத்தை ஒதினாலும் ருக்கூஉ ஸஜ்தா சிறு நிலை சிறு இருப்பு இவைகளில் குர்ஆன் ஆயத்துக்களை ஒதினாலும் ஸஜ்தாசஹ்வு வாஜிபாகும்.

மஸ்அலா தொழுகையில் கிராஅத் தோதும்போது மூன்று தஸ்பீஹ் நேரம் சும்மா நின்று விடுவானானால் ஸஜ்தாசஹ்வு வாஜிபாகும்.

மஸ்அலா - தொழுகையில் சந்தேகம் வாராத ஒருவனுக்கு முதல்தடவையாக எத்தனை ரக்அத்து தொழுதோமென்று சந்தேகம் வந்துவிடுமானால் தொழுகையை திருப்பி தொழவேண்டும் ஆனால் அடிக்கடி சந்தேகம் உண்டாகக் கூடியவனுக்கு இத்தனை ரக்அத்துகள் தொழுதோமென்று திட்டப்படாவிடில் யோஜனை செய்து மனம் நிச்சயப்படுத்தும் ரக்அத்துகளை எடுத்துக்கொள்ள வேண்டியது. அப்படி நிச்சயப்படாவிட்டால் குறைந்த ரக்அத்தை எடுத்துக்கொள்ள வேண்டியது. என்கிலும் ஒவ்வொரு ரக்அத்திகளிலும் அவை கடாசி ரக்அத்து என்று சந்தேகமிருப்பதால் சந்தேகத்திற்கு முன் தொழும் எல்லா ரக்அத்துகளிலும் இருப்பு இருந்து அத்தஹிய்யாத் ஓதி கடைசியில் ஸஜ்தா சஹ்வும் செய்து கொள்ளவேண்டும்.

மஸ்அலா :— ஒருவனுக்கு ருக்கூஇல் போனபிறகு அல்ஹம்து அல்லது சூரா ஓதவில்லை என்று எண்ணம் உண்டானால் எழுந்து நின்று அதை ஓதி மறுபடியும் ருக்கூஉ செய்து தொழ வேண்டும் ஆனால் கடைசியில் ஸஜ்தாஸஹ்வும் செய்யவேண்டும். இவ்விதம் ருக்கூஉ செய்யாமல் முன் செய்த ருக்கூஉவே போதுமென்று தொழுவானேயானால் தொழுகை கூடாது.

மஸ்அலா:— ஒருவன் வித்ரு தொழுகையின் மூன்றாவது ரக்அத்தில் குனூத்தோதாமல் ருக்கூஉ செய்வானேயானால் அதற்காக யெழுந்து நிற்கவேண்டியதில்லை. கடாசியில் ஸஜ்தாஸஹ்வு மட்டும் போதுமானது. ஆனால் ருக்கூஉ் செய்தபின் எழுந்து நின்று குனூத்தோதுவானேயானால் மறுபடியும் ருக்கூஉ செய்யவேண்டியதில்லை. என்கிலும் ஸஜ்தாஸஹ்வு செய்யவேண்டும்.

மஸ்அலா:— இமாம் தொழுகையில் முன் இருப்பையாவது அல்லது திலாவத்தின் ஸஜ்தாவையாவது அல்லது பெருநாள் தொழுகையின் தக்பீர்களையாவது மறந்து விட்டுவிடுவானானால் அவரை பின் தொடர்ந்தவர்களும் விட்டு விடவேண்டியது.

மஸ்அலா:—இமாம் குனூத்ஓதாமல் ருக்கூஉக்கு போய் விட்டால் பின்றுடர்ந்தவர்கள் குனூத்ஓதிக்கொண்டு இமாமுடன் ருக்கூஉவில் சேர்ந்துகொள்ள முடியுமானல் ஓதிக்கொள்ளலாம்.

மஸ்அலா:— இமாம் ருக்கூஉவில் இருக்கும்போது இமாமுடன் சேர்பவர்கள் தக்பீர்தஹ்ரீமா கட்டியபின் இமாமுடன் ருக்கூஉவில் ஒரு தஸ்பீகு நேரமாவது சேர்வார்களேயானல் ஷை ரக்அத்து இவர்களுக்கு கூடிவிடும். ஆனல் அல்லாஹு—அக்பர் யென்று தக்பீர் தஹ்ரீமாவைக் கொண்டே இமாமுடன் ருக்கூஉவில் சேர்ந்தால் தொழுகை கூடாது.

மஸ்அலா:—இமாம் ருக்கூஉ அல்லது ஸஜ்தாவில் இருக்கும்போது பிந்தி சேர்பவர்கள் தனு ஓதிக்கொண்டு சேரமுடியுமென்றல் ஓதிக்கொள்ளலாம். ஆனல் இருப்பில் இருக்கும்போது தனு ஓதாமலே சேரவேண்டும்.

மஸ்அலா:—இமாமானவர் பெருநாள் தொழுகைகளின் தக்பீர்களையாவது அல்லது ஜனுசாதொழுகையின் தக்பீர்களையாவது அல்லது தொழுகையின் சஜ்தாகளையாவது அதிகப்படுத்தினல் துயர்ந்தவர்கள் விட்டுவிடவேண்டியது.

மஸ்அலா - இமாம் கடைசி இருப்பு இருந்த பின் எழுந்துவிட்டால் துயர்ந்தவர்கள் உட்கார்ந்து இருக்கவேண்டும். இமாம் மறுபடியும் உட்கார்ந்து சலாம் கொடுப்பாரானல் துயர்ந்தவர்களும் ஸலாம் கொடுக்கவேண்டியது. ஆனல் கடைசி இருப்பில் உட்காராமல் அடுத்த ரக்அத்தின் ஸஜ்தாவை இமாம் செய்யும் பட்சத்தில் துயர்ந்தவர்கள் சலாம் கொடுத்து பிரிந்துவிடலாம். என்கிலும் இமாம் கடைசி இருப்பில் உட்காராமல் எழுந்து நின்றுவிடுவாரானல் எல்லோர் தொழுகையும் கூடாது.

தொழுகையின் ரக்அத்துகளின் பயான்.

---

(1) பஜ்ரில் சுன்னத்து இரண்டு ரக்அத்தும் பர்ளு இரண்டு ரக்அத்தும் ஆக 4 ம்.

(2) லுஹரில்—சுன்னத்து நாலு ரக்அத்தும் பர்ளு நாலு ரக்அத்தும் அடுத்த சுன்னத்து இரண்டு ரக்அத்தும் நபில் இரண்டு ரக்அத்தும் ஆக 12 ம்.

(3) அஸரில் சுன்னத்து நாலு ரக்அத்தும் பர்ளு நாலு ரக்அத்தும் ஆக 8 ம்.

(4) மக்ரிபில்—பர்ளு மூன்று ரக்அத்தும் சுன்னத்து இரண்டு ரக்அத்தும் நபில் இரண்டு ரக்அத்தும் ஆக 7 ம்.

(5) இஷாவில் சுன்னத்து நாலு ரக்அத்தும் பர்ளு நாலு ரக்அத்தும் அடுத்த சுன்னத்து இரண்டு ரக்அத்தும் நபில் இரண்டு ரக்அத்தும் வித்ரு மூன்று ரக்அத்தும் தஸ்பீஹ் நபில் இரண்டு ரக்அத்தும் ஆக 17 ம் தொழுகவேண்டியது.

தொழுகையின் சுன்னத்துகள் 25.

---

(1) தக்பீர் தஹ்ரீமாவுக்கு கையை உயர்த்துவதும்.

(2) வித்ரு தொழுகையில் விட்டுகட்டுவதற்கு கையை உயர்த்துவதும்.

(3) பெருநாள்களின் தொழுகைகளில் தக்பீர்களுக்காக கையை உயர்த்துவதும்.

(4) மேல்கூறிய ஸ்தானங்களில் கைவிரல்களை விரித்து வைப்பதும்,

(5) இடதுகையின்மீது வலதுகையை வைத்து தக்பீர் கட்டுவதும்.

(6) எழுந்திருக்கும்பொழுதும் உட்காரும்பொழுதும் எல்லா ருக்குன்களிலும் தக்பீர் சொல்லுவதும்.

(7) ருக்கூவில் முழங்கால்களை பிடிப்பதும்.

(8) ஷெ ருக்கூயில் கைவிரல்களை கொஞ்சம் விரித்துப்பிடிப்பதும்.

(9) ருக்கூயிலும் சஜ்தாவிலும் மூன்றுதரம் அதின் தஸ்பீஹ்கள் ஓதுவதும்.

(10) சஜ்தாவில் எழு உறுப்புகளின்பேரில் கனத்தை சமமாக வைப்பதும்.

(11) சிறுநிலை சிறுஇருப்புகளில் சற்று தாமதிப்பதும்.

(12) தனு ஓதுவதும்.

(13) அவூது ஓதுவதும்.

(14) பிஸ்மில்லாஹ் ஓதுவதும்.

(15) ஆமீன் என்ற வாக்கியத்தை சொல்லுவதும்.

(16) தனு அவூது பிஸ்மில்லாஹ் ஆமீன் இவைகளை மெதுவாக ஓதுவதும்.

(16) ஸலவாத்து ஓதுவதும்.

(18) இமாம் தக்பீர்களை ஜனங்கள் கேட்கும்படி பலத்த சப்தமாக சொல்லுவதும்.

(19) இமாம் ஸமிஅல்லாஹ்லிமன் ஹமிதாஹ் என்று சொல்லுவதும்.

(20) (முக்ததிகள்) - (துயர்ந்தவர்கள்) ரப்பனு வலக்கல் ஹது ம்என்று சொல்லுவதும்,

(21) தனியே தொழுபவர்கள் ஸமிஅல்லாஹ் லிமன்ஹமிதாஹ் ரப்பனு வலக்கல் ஹம்து என்று இவ்விரண்டையும் சேர்த்து ஒதுவதும்.

(22) ஆண்கள் இருப்பில் வலதுகாலை நிறுத்தி இடது காலின் பேரில் உட்காருவதும்.

(23) பெண்கள் வலதுகாலையும் இடது காலையும் வலது புறமாக்கி ஆஸனத்தின்மீது உட்காருவதும்.

(24) (முக்ததிகள்) இமாமுக்கு முந்தாமலும் சமமாக இல்லாமலும் பின்துயர்ந்து சொல்லுவதும்.

(25) ஸலாம் கொடுக்கும்போது இருபக்கமும் முகத்தை திருப்புவதும் இவைகள் அடங்கலும் சுன்னத்தாகும். இவைகளில் ஒன்றையாகிலும் விட்டு விடும் பக்ஷத்தில் தொழுகை மக்ரூஹ் ஆய்விடும்.

தொழுகையின் முஸ்தஹப்புகள் 21.

---

(1) ஆண்கள் தக்பீர் தஹ்ரீமாவில் இருகைகளையும் காதின் சிறுச்சோணைவரை உயர்த்துவதும்.

(2) ஆண்கள் தொப்புழுக்கு கிழேயும் பெண்கள் நெஞ்சின் பேரிலும் கைகளைவைத்து தக்பீர் கட்டுவதும்.

(3) இயன்றவரை குர்ஆனை நன்றாக ஓதுவதும்.

(4) பஜ்ருதொழுகையில் இமாம் நாற்பது ஆயத்திற்கு குறையாமல் ஓதுவதும்.

(5) சூராவுக்கு முன் பிஸ்மில்லாஹ் ஓதுவதும்.

(6) கிராஅத்தை மூன்று ஆயத்துகளுக்கு அதிகமாய் ஓதுவதும்.

(7) பருளு தொழுகைகளில் பிந்தின இரண்டு ரக்அத்தில் அல்ஹம்துமட்டும் ஓதுவதும்.

(8) நிலையில் இருகால்களின் மத்தியில் நாலு விரல் விஸ்தீரணம் உண்டாக்கிக்கொள்வதும்.

(9) வலமிடம் திரும்பாமல் இருப்பதும்.

(10) இயன்றவரை கொட்டாவியையும் இருமலையும் தடுப்பதும்.

(11) ருக்கூஉயில் முதுகை ஆஸனத்திற்கு சமமாக செய்வதும்.

(12) ஸுஜூதில் எழு உறுப்புகளையும் முறையாக வைப்பதும்.

(13) ஸுஜூதை விட்டெழும்போது அதின் ஒழுகின்படி உறுப்புகளை எடுப்பதும்.

(14) ஸஜ்தாவில் விரல்களை கிப்லாவுக்கு நோக்கிக்கொள்வதும்.

15. தனியே தொழுபவர் தஸ்பீஹை மூன்றுக்குமேல் 5—7—9—11 வரை அதிகமாக்கிக்கொள்வதும்

(16) ஸஜ்தாவில் இருகைகளையும் காதுகளுக்கு நோக வைப்பதும்.

(17) ஆண்கள் ஸஜ்தாவில் இரண்டு புஜங்களை விலாவை விட்டும் வயிற்றை, தொடையை விட்டும் தொடையை கெண்டைக் காலை விட்டும் கெண்டைக்காலை பூமியைவிட்டும் நீக்கிவைப்பதும்.

(18) பெண்கள்மேல் கூறிய உறுப்புகளை சேர்த்து வைப்பதும்.

(19) இருப்புகளில் இருகைகளை தொடையில் வைப்பதும்

(20) சலாம் சொல்லும்போது முகத்தை நன்றாய் திருப்பு புவதும்.

(21 இமாமுடன் முந்தின ரக்அத்தில் சேராதவர்கள் இமாம் கடைசியில் இருபக்கமும் ஸலாம் கொடுத்தபின் எழுந்திருப்பதும் முஸ்தஹப்புகளாகும் இவைகளில் ஒன்றேனும் விட்டுவிடும் பட்சத்தில் தொழுகையின் நன்மை குறைந்துவிடும்.

தொழுகையின் முறிச்சல்கள். 17

---

(1) தொழுகிறவன் ஞாபகத்தோடு பேசினாலும் அல்லது மறந்து பேசினாலும்.

(2) அன்னியர்கட்கு ஸலாம் சொன்னாலும், அல்லது சலாமிற்கு பதில் சொன்னாலும்.

(3) துக்ககரமான விஷயத்திற்கு பதில்கூறினாலும்.

(4) சந்தோஷமான விஷயத்திற்கு பதில்சொன்னாலும்.

(5) தும்மினவருக்கு பிரதி பதில் சொன்னாலும்.

(6) கடலே பருமமுள்ள வஸ்து பல்லில் ஒட்டினதை விழுங்கினாலும்.

186207

(7) கொஞ்சமாக தின்றாலும் கொஞ்சமாக குடித்தாலும்.

(8) உலகஆபத்தால் சப்தம் வெளியாகும்படி அழுதாலும்.

(9) அச்சாம் வெளியாகும் விதம் அஹ் இஹ் இக் என்று சப்தமிட்டாலும்.

தமிழ் ... நூலகம்
186207

(10) தன் இமாமைத் தவிர மற்றவர் ஓதும் பிழையை திருத்திக்கொடுத்தாலும்.

(11) இமாம் தன்னை பின்பற்றினவர்களைத் தவிர மற்றவர்களின் பிழைதிருத்தத்தை கேட்டு ஓதினாலும்.

(12) குர்ஆன் ஷரீபின் ஆயத்துகளை பார்த்து ஓதினாலும்.

(13) ஸஜ்தாவில் கால்விரல்களை பூமியில் படாமல் உயர்த்திக் கொண்டாலும்.

(14) ஸஜ்தா செய்யும்போது நெற்றியை பூமியில் படாமல் செய்தாலும்.

(15) இமாமுடன் சேர்ந்து தொழுபவன் இமாமுக்கு முந்தி நின்று தொழுதாலும்.

(16) ஒரு செயலை மூன்றுதரம் செய்தாலும்.

(17) தன் காதுக்கு கேட்கும்படி வெடிசிரிப்பு சிரித்தாலும், ஆக இந்த பதினேழு விஷயங்களால் தொழுகை முறிந்துவிடும் திருப்பி தொழுவதும் பர்லாக இருக்கும்.

தொழுகையின் மக்ருஹ்கள் 26.

---

(1) தொழுபவர் ஒரு ருக்னில் இரண்டு செயல் செய்வதும்.

(2) வலமிடமும் முன்பக்கமும் அண்ணார்ந்து பார்ப்பதும்.

(3) நெற்றியில் பட்ட மண் தூசி முதலியவற்றை துடைப்பதும்.

(4) ஆடைகளை தோளின்பேரில் போட்டு இருபக்கத்தில் தொங்கவிடுவதும்.

(5) ருக்கூயில் தலையையும் ஆஸனத்தையும் சமமில்லாமல் வைப்பதும்.

(6) அசைவதும்.

(7) சோம்பலால் தேகத்தை வளைப்பதும்.

(8) கொட்டாவி வந்தால் வாய் மூடாமலிருப்பதும்.

(9) கண்களை மூடிக்கொள்வதும்.

(10) விரல்களை நெட்டி முறிப்பதும்.

(11) பட்டு ஆடைகளை கட்டிக்கொண்டு தொழுவதும்.

(12) தலையை திறந்துகொள்வதும்.

(13) யாதொரு வஸ்துவை முகர்வதும்.

(14) முந்தின ரக்அத்தில் கீழ் ஆயத்தும் இரண்டாவது ரக்அத்தில் மேல் ஆயத்துகளை பர்லான தொழுகையில் ஓதுவதும்.

(15) பர்ளு தொழுகையில் முந்தின ரக்அத்தில் சிறிய சூராவும் பிந்தின ரக்அத்தில் பெரிய சூரா ஓதுவதும்.

(16) ஆயத்துகளை வேகமாய் ஓதுவதும்.

(17) பர்ளு தொழுகையில் ஒரு சூராவை மடக்கி ஓதுவதும்

(18) சஜ்தா செய்யும்போது முழங்கைகளை தரையில் படுக்கவைப்பதும்

(19) ஆண்கள் தலையில் நீளமாக ரோமங்கள் வளர்த்திருந்தால் அதை கொண்டைபோட்டுக்கொள்கிறதும்.

(20) சஜ்தா செய்யப்போகும் சமயம் முந்தி கைகளை பூமியில்வைப்பதும்

(21) சஜ்தாவை விட்டு எழும்பும்போது முந்தி முழங்காலைத் தூக்குவதும்.

(22) தலைப்பாகையின்மீது சஜ்தா செய்வதும்.

(23) சஜ்தாவில் தொடையுடன் வயிற்றை சேர்ப்பதும்.

(24) தொழுகுமிடத்தில் உயிருள்ள உருவப்படங்களை வைப்பதும்.

(25) ஆண்கள் தொழுகையில் சிவப்பு, மஞ்சள்நிறமுடைய துணிகளை அணிவதும்.

(26) சப்தமில்லாமல் புன்சிறிப்பு சிறிப்பதும் தொழுகையின் மக்ரூஹ்களாம். தொழுகையில் மக்ரூஹான காரியங்கள் விஷயமானல் சிறிய பாவமும் நன்மை குறைவும் உண்டாகும்.

தொழுகவேண்டிய முறை.

தொழுகிறவன் மேற்கூறிய பர்ளு வாஜிப் சுன்னத்து முதலிய ஸகல காரியங்களையும் தெரிந்து மிக்க பேணுதலாக கிப்லாவின் பக்கம் முகத்தை திருப்பி நின்றவனாக நிய்யத்துச் செய்யவும். அதாவது சுன்னத்துத் தொழுகிறவன் அல்லாஹ்வுக்காக இத்தனை ரக்அத்து தொழுகிறேன் என்றும், பர்ளு தொழுகையாயின் அல்லாஹ்வுக்காக இன்ன நேரத்து தொழுகை இத்தனை ரக்அத்து தொழுகிறேன் என்றும், வித்ரு தொழுகையானல் இந்த இரவின் வித்ரை அல்லாஹ்வுக்காக தொழுகிறேன் என்று மனதில் நிய்யத்துச் செய்து கொள்ளவும். ஆனல் வாயில் சொல்லுவது முஸ்தஹப்பாக இருக்கும். இனி இமாம்முடன் சேர்ந்து தொழுபவர்கள் இந்த இமாமை துயர்ந்து தொழுகிறேன் என்னும் வாக்கியத்தை சேர்த்துக் கொள்ளவும். பிறகு இரண்டு கைகளின் பெருவிரலினல் இருகாதுகளின் சிறு சோனை தொட்டு உள்ளங் கைகளை கிப்லாவின் பக்கம் திருப்பி மற்ற விரல்களை கொஞ்சம் விறித்துக் கொண்டு அல்லாஹ் அக்பர் என்று சொல்லிமுடித்து தொப்பிளுக்கு கீழே இரண்டு கைகளையும் கொண்டுவந்து இடது கையின்பேரில் வலது கையைவைத்து இடதுகையின் மணிக்கட்டை வலதுகையின்

சுண்டுவிரலாலும் பெருவிரலாலும் பிடித்து வலது கையினுடைய மற்ற மூன்று விரல்களையும் இடதுகையின் மேல் வைத்து கட்டிக் கொள்ள வேண்டும்.

இப்படி கட்டுவதற்கு தக்பீர் தஹ்ரீமா என்று சொல்லப்படும் ஆனால் பெண்கள் கைகளை தோள்வரை உயர்த்தி விரலைத் திறக்காமல் நெஞ்சின்மீது கட்டிக்கொள்ளவேண்டியது. இமாமுடன் சேர்ந்து தொழுபவர்கள் இமாமின் தக்பீர் முடிந்தவுடன் இவர்கள் தக்பீரை ஆரம்பிக்கவேண்டும். இமாம் பலமாக தக்பீரைச் சொல்லுவாரானல் (முக்ததிகள்) பின் துடர்ந்தவர்களும் தனியே தொழுபவர்களும் மெதுவாக தக்பீர் சொல்லிக்கொள்ள வேண்டும் இரண்டு கால்களின் மத்தியில் நான்கு விரல் அளவு விஸ்தீரணம் இருக்கவேண்டும். பெண்கள் இரு பாதங்களையும் சேர்த்து வைக்க வேண்டும். தொழுகிறவர்களின் பார்வை சஜ்தா செய்யும் ஸ்தலத்தில் இருக்கவேண்டும். மேல்கூறியவாறு நின்று தக்பீர் கட்டியபின் தனா ஓதவேண்டியது. அதாவது சுப்ஹான கல்லாஹும்ம வபிஹம்திக்க வதபாரகஸ்முக்க வத்தஆலா ஜத்துக்க வலாயிலாஹ கைருக்க என்று ஓதிய பிறகு அஊது பில்லாஹிமினஷ் ஷைத்தானிர்ரஜீம்.

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் என்று ஓதியபின் அல்ஹம்தும் சூராவும் ஓதி தக்பீர் சொல்லிக்கொண்டு ருக்கூஉ செய்யவும். ஆனால் இமாமை துயர்ந்தவர்கள் தனாவும், ஆமீனும் தவிர மற்றவைகளை ஓதாமல் இருக்கவேண்டும், ருக்கூயில் விரல்களை விறித்தவனாக முழங்காலை பிடித்துக்கொண்டு கண்பார்வை பாதங்களின்பேரில் வைக்கவேண்டும். கைகளையும் கால்களையும் மடக்காமல் நேராய் வைத்தும் தலையை இடுப்புக்கு சமமாக வைக்கவேண்டும். ஆனால் பெண்கள் அதிகம் குனியவேண்டுவதில்லை. உடம்புமுழுவதையும் முழங்கால்களையும் சற்று வளைத்தும் கைவிரல்களை விரிக்காமல் வைத்துக்கொள்ளவேண்டும். இவ்வாறு குனிந்துகொண்டு சுப்ஹான ரப்பியல் அளீம் என்று மூன்று அல்லது ஐந்து தடவை மெள்ள ஓதவேண்டும். பிறகு ஸமி அல்லாஹுலிமன் ஹமிதா என்று சொன்னவனாக சிரசை உயர்த்தல் வேண்டும். கைகளை தொங்க விட்டு நிமிர்ந்து நின்றவுடன் அல்லாஹும் மாப்பனா வலக்கல்

ஹம்து என்று சொல்லவேண்டும். இமாமை துயர்ந்தவர்கள் ரப்பனுவலக்கல் ஹம்து என்று மட்டும் சொல்லுவது போதும். பின்பு அல்லாஹு அக்பர் என்று சொல்லிக்கொண்டு நேராக உட்கார்ந்து முதலில் முழங்காலைத் தரையில்வைத்து பின்பு உள்ளங் கைகளையும் பிறகுமூக்கையும் பின்புநெற்றியையும் தரையில்படும்படி வைத்துப் சஜ்தா செய்யவும். அப்போது கைவிரல்களை சேர்த்து கிப்லாவிற்கு நேராக நீட்டி காதுகளுக்கு நேரில் இரு பெருவிரல் களும் இருக்கும்படி வைக்கவேண்டும். காலுகள் நிறுத்தப்பட்டு விரல்களை கிப்லாவின் பக்கமாக வைக்கவேண்டும். இரண்டு தோள் களும் விலாவை விட்டு அகட்டிவைக்க வேண்டியது. வயிறு தொடையை விட்டும் தொடைகள் கெண்டைக்காலைவிட்டும் நீக்கி வைத்து கண்பார்வை மூக்கின்பேரில் இருக்கவேண்டும். இவ் வாறு செய்வதில் முதுகு வளைந்து இருக்கப்படாது. தேகத்தின் கனமானது எல்லாஉறுப்புகளின்பேரில் சமமாக இருக்கவேண்டும் அப்போது மூன்று அல்லது ஐந்து தடவை சுப்ஹான ரப்பியல் அஉலா என்று மெள்ள ஓதவேண்டும். ஆனால் பெண்கள் அவர் களின் சர்வ உறுப்புக்களையும் ஒடுக்கிஇரண்டு பாதங்களையும் வலது பக்கம் விட்டுவிட வேண்டும். பிறகு அல்லாஹு அக்பர் என்று சொல்லிக்கொண்டு நிமிர்ந்து மண்டிபோட்டு உட்காரவேண்டும். அப்போது முழங்காவின் பேரில் உள்ளங்கைகளை வைத்து ஒரு தஸ் பீஹ் ஓதும் நேரம்வரை இருந்து பிறகு அல்லாஹு அக்பர் என்று சொல்லிக்கொண்டு மறுபடியும் ஒருமுறை முன்போல சஜ்தாசெய்ய வேண்டும். பின்பு அல்லாஹு அக்பர் என்று மொழிந்து கைகளை பூமியில் ஊண்டாமல் முழங்கால்களின் மீது கையைவைத்து கால்க ளின் பேரில் பாரத்தை வைத்தவனாக உட்காராமல் நேராக எழுந்து நிற்கவேண்டியது இதுவே தொழுகையில் ஒரு ரக்அத்து ஆகிறது இவ்விதம் நின்ற பிறகு தனுவும் அஊதும் ஓதாமல் பிஸ்மில்லாஹ் வுடன் அல்ஹம்தும் சூராவும்ஓதிமுந்தின ரக்அத்ப்போல் தொழுக வேண்டியது. இவ்வாராக இரண்டாவது ரக்அத்தின் இரண்டு சஜ்தா வும் செய்தபின்னர் முன்போல உட்காரவேண்டியது அதாவது இடதுகாலை படுக்கவைத்து அதின்பேரில் ஆஸனம்வைத்து உட் கார்ந்து வலதுகாலை நிறுத்தி மேற்படி கால் விரல்களை கிப்லாவின்

பக்கமாக வைத்துக்கொள்ளவேண்டும். கைவிரல்களை சற்று விறித்து தொடையின்மீது வைக்கவும். ஆனால் பெண்கள் இரண்டு பாதங்களையும் வலது பக்கம் விட்டுவிட்டு ஆஸனத்தை பூமியில் வைத்து இருக்கவேண்டும். கைவிரல்களை சேர்த்தும் கண்களின் பார்வை மடியின்மீது வைத்தவனாக அத்தஹிய்யாத் ஓத வேண்டியது. அத்தஹிய்யாத்தில் லா என்று சொல்லும்போது வலதுகையின் கலிமா விரலை உயர்த்தி இல்லல்லாஹு என்று ஓதின வுடன் அவ்விரலை கீழேவைத்து விடவேண்டும். மூன்று அல்லது நான்கு ரக்அத்துகள் தொழவேண்டுமானால் அத்தஹியாத்தில் அப்துஹு வரசூலுஹு வரை ஓதி எழுந்து முன்போல தொழ வேண்டியது. ஆனால் பர்ளு தொழுகையாக இருந்தால் பிந்தின இரண்டு ரக்அத்தில் அல்ஹம்து மட்டும் ஓதவேண்டும். சுன்னத்தான தொழுகையாயின் நான்கு ரக்அத்திற்கும் அல்ஹம்தும் சூராவும் ஓதவேண்டும். இவ்விதம் 2 அல்லது 3 அல்லது 4-ரக்அத்தாக தொழுது முடிந்தபின் முன்போல கடாசி இருப்பில் அத்தஹியாத்தும் தரூதே இப்ராஹீமும் துஆயே மாதூராவும் ஓதி பின்பு அஸ்ஸலாமுஅலைக்கும வரஹ்மதுல்லாஹி என்று சொல்லிக்கொண்டு வலதுபக்கம் முகத்தை திருப்பவேண்டும். அப்படியே சலாம் சொல்லிக்கொண்டு இடது பக்கமும் முகத்தை திருப்பவேண்டும். ஆனால் இமாம் முந்தின சலாமின் சப்தத்தை சற்று இறைந்தும் பிந்தின ஸலாமை கொஞ்சம் மெதுவாகவும் சொல்லவேண்டியது. இனி இரவின் வித்ரு தொழுகையை தொழும்போதும் மூன்றுவது ரக்அத்தில் அல்ஹம்தும் சூராவும் ஓதின பிறகு இரண்டுகைகளையும உயர்த்தி தக்பீர் தஹ்ரீமா கட்டுவது போல் அல்லாஹு அக்பர் என்று தக்பீர் கட்டிக்கொண்டு துஆ குனூத்தோதவேண்டும். தெரியாதவர்கள் ரப்பனா ஆத்தினா வென்னும் துஆவை ஓதினாலும் போதும்

ஜும்ஆ தொழுகையின் பயான்.

ஜும்ஆ வென்னும் வெள்ளிக்கிழமையத்தினம் குளித்து இயன்றவரை நல்லாடைபூண்டும் வாஸனைபூசிக்கொண்டும் தொழுக

வேண்டியது. ஜும்ஆவின் பாங்கு சொன்னபிறகு வியாபாரம் முதலி யவைகள் செய்வது ஹராமாய் இருக்கும் ஜும்ஆ எழுவகைக் கூட் டத்தினர் மீது கடமை இல்லை.

(1) ஒரு ஊரில் 15 நாட்கள் இராமல் பிரயாணம் செய்ப வர்கள்.

(2) சிறைச்சாலையில் அகடைபட்டவர்கள்.

(3) விரோதிகளின் பயத்தால் வெளியில் வரமுடியாத வர்கள்.

(4) நடக்க முடியாத நொண்டிகள்.

(5) இரண்டு கண் பார்வையற்றவர்கள்.

(6) அதிக வியாதியுள்ளவர்கள்.

(7) பெரும் மழையாலும் சேறு முதலியவற்றால் கஷ்டப் படுபவர்கள்.

தொழுகையின் முறை ஜும்ஆ தொழுக பள்ளியில் நுளைந்த வுடன் ஒளு நபில் இரண்டு ரக்அத்தும் மஸ்ஜிது நபில் இரண்டு ரக்அத்தும் சுன்னத்துல் ஜும்ஆ நான்கு ரக்அத்தும் தொழுது உட்கார்ந்து தூங்காமல் குத்பாவை கேட்கவேண்டும். பிறகு இமாமு டன் பர்ளு இரண்டு ரக்அத்து தொழுத பின்னர் ஜும்ஆவின் சுன்னத்து நான்கு ரக்அத்தும் வக்தியா சுன்னத்து இரண்டு ரக்அத்தும் தொழுகவேண்டியது. ஆனால் ஜும்ஆ கூடாத ஊர்களில் ஆகிர் லுஹர் தொழுகும் விஷயமாக இக்த்திலாபுகள் உண்டாயிருக் றது. இவ்விஷயமாக வடதேசத்திலுள்ள அனேக மவுலவிகளும் ஜனாப் மவுலானா மவுலவி அஷரப்அலி சாகிப் தானவிபவர்களும் சேர்ந்து ஆகிர் லுஹர் தொழுவதற்கு சரியான ஆதாரம் இல்லை என்றும் ஷியாகளிலுள்ள ஒரு அரசர் இதை எற்படுத்தின ரென்றும் அக்காலத்து சுன்னத்து ஜமாஅத்தின் உலமாக்கள் அரச னின் கொடுங்கோலை அஞ்சி மேற்படி அரசனின் உத்தரவை ஆமோ தித்தார்கள் என்றும் மிகவும் தெளிவான ஒரு பத்வா எழுதியிருக் கிறார்கள். அப்பத்துவாவை பார்த்தால் தொழவேண்டியது அவசிய

மில்லை என்று தோன்றுகிறது. இது விஷயம் உங்களுக்கு நன்கு தெரியவேணுமாயின் உலமாக்களிடம் கேட்டுக்கொள்ளவும். (அல்லாஹு அகுலம்).

பெருநாள் தொழுகையின் பயான்.

எவர்கள்மீது ஜும்ஆ தொழுகை விதியாகுமோ அவர்கள்மீது பெருநாள் தொழுகை விதியாகும். அதாவது வாஜிபாகும் ஜும்ஆவில் குத்பா ஓதுவது பர்லாகும், பெருநாள் தொழுகையின் குத்பா சுன்னத்தாகும். இந்த பெருநாட்களில் ஸ்நானம்செய்வதும் இயன்றமட்டும் நல்ல உடைகள் அணிவதும் வாஸனை பூசுவதும் சுன்னத்தாகும். பெருநாள் தொழுகையின் நேரமாவது சூரிய உதயமுதல் இரண்டு ஜாமம் வரையாக இருக்கும். அதாவது ஷுமார் 11½ மணிவரை தொழுதுகொள்ளலாம். ஷவ்வால் மாதம் முதல் தேதியில் அசாத்தியமான புலய் மழை முதலிய காரணங்களால் மறுநாள் தொழுதுகொள்வது வாஜிபாகும். ஹஜ்ஜு பெருநாள் தொழுகையை பெரும் ஆபத்துகளின் காரணங்களால் பிந்தின மூன்று நாள் வரை தொழுதுகொள்வது ஜாயிசாகும். நோன்பு பெருநாளில் தொழுகப் போவதற்கு முந்தி எதாவது இனிப்பு பதார்த்தமும் ஹஜ்ஜு பெருநாளில் ஒன்றும் தின்னுமல் தொழுகைக்குப் பின் குர்பானி மாமிசத்தை சாப்பிடுவதும் முஸ்தஹப்பாகும்.

இந்த பெருநாள் தொழுகை வாஜிபாகிய இரண்டு ரக்அத்தை ஆறு தக்பீர்களுடன் இந்த இமாமைத் தொடர்ந்து அல்லாஹுத் தஆலாவுக்காக தொழுகிறேன் என்று நிய்யத்துச் செய்துகொண்டு தக்பீர் தஹ்ரீமா கட்டி தனா ஓதியபின் இரண்டு தடவை அல்லாஹு அக்பர் என்று சொல்லிக்கொண்டு இரண்டு தடவையும் கைகளை யுயர்த்தி கீழே தொங்கவிட்டு மூன்றுவது தக்பீருடன் கைகளை கட்டிக்கொள்ள வேண்டும். பின்பு இரண்டாவது ரக்அத்தில் ருக்கூஉ செய்யுமுன் முன்சொன்ன விதமாக மூன்று தடவை தக்பீர்

கள் சொல்லி நான்காவது தக்பீரை சொல்லிக்கொண்டு ருக்கூஉக்கு போய்விடவேண்டும், மற்ற தொழுகைகளைப்போல் இதையும் தொழுத பின்னர் குத்பாவை கவனத்துடன் கேட்பது வாஜிபாகும்

ஜனஸா தொழுகையின் பயான்.

யாருக்காவது மவுத்தின் குறிகள் காணப்படுமானால் தன் குற்றங்களுக்கு ஆண்டவனிடம் பிழைபொறுக்கத் தேடவேண்டும் இன்னும் சமீபத்திலிருப்பவர்கள் கலிமாவையும் யாசீன் சூரா முதலிய வற்றை பலத்த சப்தத்தோடு ஓதவேண்டும். முகத்தை கிப்லா பக்கமாக ஆக்கவேண்டும். அசுத்தமான ஸ்திரீ புருஷர்கள் அவ்விடம் இருந்தால் நீங்கவேண்டும். மரணமடைந்த பின்னர் சீக்கிரம் குளிப்பாட்டுவதும் கபனிடுவதும் வாஜிபாகும்.

ஜனசாவை தொழுகவைப்பதும் அடக்கம் செய்வதும் பர்ளு கிபாயாவாகும் ஜனசா தொழுகையின் நிய்யத்து அதாவது தொழுகை ஆண்டவனுக்கும், துஆமையித்திற்கும் நான்கு தக்பீர்களுடன் இந்த இமாமை பின்துயர்ந்து தொழுகிறேன் என்ற நிய்யத்துடன் அல்லஹூ அக்பர்என்றுமற்ற தொழுகைகளைப்போல் தக்பீர்கட்டிக் கொண்டு தனா ஓதவேண்டியது. ஆனால் வத்தஆலாஜத்துக்க என்று ஓதியபின் வஜல்லதனாஉக்க என்னும் வாக்கியத்தையும் சேர்த்து ஓதவேண்டும். பிறகு இரண்டாவது தடவை அல்லாஹு அக்பர் என்று தக்பீர் சொன்ன பின் அத்தஹியாத்தில் ஓதும் சலவாத்தே இப்ராஹீமை ஓதிய பிறகு மூன்றுவது தடவை அல்லாஹு அக்பர் என்று சொன்ன பிறகு அல்லாஹும்ம உபிர்லி ஹய்யினா வமய்யித்தினா வஷாஹிதினா வகாயிப்பினா வஸகீரினா வகபீரினா வதக்கரினா வஉன்தானா அல்லாஹும்மமன் அஹயைத்தஹு மின்னாவ அஹ்யிஹி அலல்இஸ்லாம் வமன்த்தவப்பைத்தஹு அலல்யீமான் என்றோதி நான்காவது தக்பீர்சொல்லியபின் ரப்பனா பித்துன்யா ஹஸனத்தன்வபில் ஆகிறத்திஹஸனத்தன் வக்கினா

பிறஹ்மத்திக்கஅதாபல் கப்ரிவ அதாபன்னர் என்று ஓதி ஸலாம் சொல்லவேண்டியது. மூன்ருவது தக்பீரில் படித்த துஆவின் பொருள் ஆண்டவனே எங்களில் ஜீவித்திருப்பவருக்கும் மாரண மடைந்தவர்களுக்கும் பக்கத்திலிருப்பவர்கட்கும் மறைந்து இருப்ப வர்களுக்கும் சிறியார் பெரியோர்களுக்கும் ஸ்திரீபுருஷர்களின் குற்றங்களை மன்னித்து ரெக்ஷிப்பாயாக. ஆண்டவனே நீ எங்களில் யாரை ஜீவித்திருக்கச்செய்தாயோ அவர்களை இஸ்லாத்தின் பேரி லும் இன்னும் எங்களில் யாரை மாரணமடையச் செய்வாயோ அவர் களை ஈமானின் பேரிலும் மாரணமடைய செய்வாயாக.

நான்காவது தக்பீரில் ஓதிய துஆவின்பொருள். எங்கள் ஆண்டவனே இம்மையில் சகல பாக்கியத்தையும் இன்னும் மறுமை யில் சகல பாக்கியத்தையும் கொடுத்து கப்ரின் வேதனையும் நரகத் தின் வேதனையும் விட்டு காப்பாற்றுவாயாக.

மஸ்அலா:-ஒருவனுக்கு ஜனுசாதொழுகையில் ஒன்று இரண் டு தக்பீர்கள் தவறிவிடுமானல் இமாம் ஸலாம் கொடுத்தபின் மீதி யுள்ள தக்பீர்களை தானகவே சொல்லிக்கொண்டு ஸலாம் கொடுக்க வேண்டியது.

மஸ்அலா:-யெவருக்கு ஜனுசா தொழுகை கிடைக்காதென்று எண்ணம் உண்டாகுமோ அவர் தயம்மம் செய்து கொண்டு இமா முடன் சேர்ந்து தொழுகலாம். ஆனல் ஜனுசாவின் முக்கிய சொந் தக்காரராக இருந்தால் தயம்மம் செய்து தொழுவது கூடாது.

பாங்கின் பொருளும் தொழுகையில் ஓதக்கூடியவைகளின் பொருளுகளின் பயான்.

அல்லாஹு-அக்பர் ஆண்டவன் மிகவும் பெரியவன். அஷ் ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு உண்மையாக சாட்சிசொல் லுகிறேன் திட்டமாக வணக்கத்திற்கு லாயக்கானவன் ஆண்டவ

னைத் தவிர யாருமில்லை. அஷ்ஹது அன்னமுஹம்மதர்ரசூலுல்லாஹி உண்மையாக சாட்சிசொல்லுகிறேன். நிட்டமாக முகம்மது நபிசல் லல்லாஹு அலைஹிவசல்லம் அல்லாஹுத்த ஆலாவின் உண்மை தூதாக இருக்கிறார்கள். ஹய்யஅலஸ்ஸலாத் தொழுகைக்காக வரு வீர்களாக ஹய்ய அலல் பலாஹ ஜெயமடைவதற்கு வருவீர்களாக அஸ்ஸலாத்து கைரும்மினன்நவ்ம் தொழுகையாகிறது. தூக்கத்தை விட மேன்மையானதாகும். அல்லாஹு அக்பர் லாயிலாஹ இல் லல்லாஹு வணக்கத்திற்குரியவன் யாருமில்லை. அல்லாஹுத்த ஆலாவைத் தவிர கதுகாமதிஸ்ஸலாத் நிட்டமாக தொழுகை நிலைத் துவிட்டது. தனு சுப்ஹானக்கல்லாஹும்ம வபிஹம்திக்க ஆண்ட வனே நீ துய்யவன் உன்புகழால் உன்னை புகழுகிறேன். வதபாரகஸ் முக்க உன் திருநாமம் மேன்மையுடையது. வதஆலாஜத்துக்க உன் மேன்மை மிகவும் உன்னதமானது. வலாயிலாஹ கைருக்க உன்னைத் தவிர வணக்கத்திற்கு தகுமானவன் யாருமில்லை.

அஊது பில்லாஹிமினஷ்ஷைத்தானிர்ரஜீம். நீக்கப்பட்ட ஷைத்தானுடைய தீங்குகளை விட்டும் ஆண்டவனிடம் இரக்ஷிக்கத் தேடுகின்றேன். பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம் இம்மையில் யாவர்கட்கும் கிருபைசெய்பவனும் மறுமையில் விஸ்வாஸிகளுக்கு மட்டும் கிருபைசெய்பவனுமான ஆண்டவனின் நாமத்தால் ஆரம் பிக்கின்றேன்.

சூரத்துல் பாத்திஹா.

அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன். சர்வ உலகங்களையும் படைத்து இரக்ஷிக்கும் ஆண்டவனுக்கே சர்வ புகழும் அர்ரஹ்மா னிர்ரஹீம் இம்மையில் யாவர்கட்கும் கிருபைசெய்பவனும் மறுமை யில் விஸ்வாசிகட்கு மட்டும் கிருபைசெய்பவன். மாலிக்கி எவ்மித் தீன் கூலிகொடுக்கும் நாளின் எஜமானனவன் இய்யாக்க நஉபுது. நாங்கள் உன்னையே வணங்குகிறோம். வஇய்யாக்க நஸ்தயீன்

இன்னும் நாங்கள் உன்னிடமே உதவி தேடுகிறோம். இஹ்தி நஸ் ஸிராத்தல் முஸ்தகீம எங்களை நேரான வழியில் நடத்துவாயாக. சிராத்தல்லதீன அன்அம்த்த அலைஹிம் யார்மீது நீ நன்கொடை யளித்தாயோ அவர்களின் வழியில் எங்களைசெலுத்துவாயாக. கை ரில் மகுலூபி அலைஹிம் உன்கோபத்திலுட்பட்டவர்களின் வழி யைவிட்டும் (கருத்துநஸாராக்கள்) வலள்ளாலீன் வழிசரிகிபோன வர்களின் வழியைவிட்டும் (கருத்துஎஹூதிகள்) காப்பாற்றுவா யாக. ஆமீன் அவ்வண்ணமாகுக.

சூறத்துல்இகுலாஸ்.

குல்ஹுவல்லாஹு அஹது முஹம்மதே நீர் சொல்லும் அவனுகிறவன் அல்லாஹ் ஒருவனுக இருக்கும். அல்லாஹுஸ்ஸ மது அல்லாஹுத்தஆலா ஸர்வ வஸ்துக்களின் தேவையைவிட்டும் நீங்கினவன் லம்யெலிது அவன் யாரையும் பெறவில்லை. கருத்து ஸ்திரீபுத்திரர்கள் அற்றவன் வலம்யூலது அவன்யாருக்கும் பிறக்கவு மில்லை. (கருத்து மாதா பிதா அற்றவன்) வலம்யெகுல்லஹுகுபு வன் அஹது இன்னும் அவனுக்கு சமானமானவன் யாருமில்லை. சுப்ஹான ரப்பியல் அளீம். மகா பெரிய என் நாயனை துதிக்கின் றேன். ஸமி அல்லாஹு லிமன் ஹமிதா. ஆண்டவன் தன்னை புகழ்வோனின் புகழை ஒப்புக்கொள்வான். ரப்பனுவலக்கல் ஹம்து எங்கள் ரக்ஷகனே சர்வபுகழும் உனக்கே உடையது. சுப்ஹான ரப்பியல் அஉலா என் உயர்வான நாயனை துதிக்கின்றேன். அத்த ஹிய்யாத்து லில்லாஹி வஸ்ஸலவாத்துவத்தை யிபாத்து நாவால் துதிக்கக்கூடிய ஸரீரத்தால் உண்டாகக்கூடிய பொருளால் அமயக் கூடிய ஸர்வவணக்கங்களும் ஆண்டவனுக்கே உண்டாவதாக அஸ் ஸலாமு அலைக்க அய்யு ஹன்னபியுவ ரஹ்மத்துல்லாஹி வபாக் காத்துஹு ஓ! நபியே உங்கள்பேரில் ஈடேற்றமும் அல்லாஹவின் கிருபையும் அதிவிசேஷமும் உண்டாவதாகவும். அஸ்ஸலாமு அலைனு வஅலாஇபா தில்லாஹிஸ் ஸாலிஹீன் எங்கள்பேரிலும் இன் னும் ஆண்டவனின் நல்லடியார்கள் பேரிலும் ஈடேற்ற முண்டாவ தாகவும். அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு வஅஷ் ஹது

அன்ன முஹம்மதன் அப்துஹூ வரசூலுஹூ உண்மையாக நான் சாட்சிசொல்லுகிறேன். வணக்கத்திற்குரியவன் ஆண்டவனைத் தவிரயாருமில்லை. இன்னும் உண்மையாக நான்சாட்சி கூறுகிறேன். திட்டமாக முஹம்மது (சல்) அவர்கள் ஆண்டவனின் அடியாரும் அவனின் தூதருமாக இருக்கிறார்கள்.

அல்லாஹும்மஸல்லி அலாமுஹம்மதின் வ அ ல ா ஆலி முஹம்மதின் நாயனே முகம்மது (சல்) அவர்கள்மீதும் அவர்களின் பந்துக்கள்மீதும் கிருபைசெய்வாயாக. கமாஸல்லைத்த அலாஇப்ரா ஹீம வஅலா ஆலிஇப்ராஹீம எவ்விதமெனின் நீஇப்ராஹீம் (அலை) அவர்கள்மீதும் அவர்களின் இனபந்துக்கள்மீதும் கிருபை செய் தாயே அவ்விதமாக இன்னக்கஹமீதுன் மஜீது திட்டமாக நீபுகழுக் குறியவனாகவும் மகிமைவாய்ந்தவனாகவும் இ ரு க் கி ரு ய். அல்லா ஹும்ம பாரிக் அலாமுகம்மதின்வ அலா ஆலி முஹம்மதின் நாய னே முஹம்மது (சல்) அவர்களின்மீதும் அவர்கள் பந்துக்கள்மீதும் அதிகமான பாக்கியத்தை அளிப்பாயாக. கமாபாரக்த்த அலா இபுராஹீம வஅலா ஆலி இபுராஹீம எவ்விதமென்றால் நீ இபுரா ஹீம் (அலை) அவர்கள்மீதும் அவர்கள்பந்துக்கள்மீதும் அதிகமான பாக்கியத்தை அளித்ததுபோல் இன்னக்கஹமீதுன் மஜீது.

அல்லாஹும்ம உபிர்லி வலிவாலிதைய்ய வலிஉஸ்தாதிய வலிஜமீயில் மூமினீனவல் மூமினாத் வல்முஸ்லிமீன வல்முஸ்லிமாத் பிரஹ்மத்திக்க யாஅர்ஹமர்ராஹிமீன் நாயனே நீ எனக்கும் என் மாதாபிதாக்களுக்கும் என்உபாத்தியாயருக்கும் மூமினான சர்வ ஆண் பெண்களுக்கும் முஸ்லீமான சகல ஆண்பெண்களுக்கும் உன்கிரு பையால் பிழைபொறுப்பாயாக. ஓய் கிருபையாளர்களுக்கெல்லாம் மகாகிருபையாளனே குனூத்துஆ அல்லாஹும்ம இன்னா நஸ்தயீ னுக்க வநததஉபிருக்க வ னூமினுபிக்க நாயனே திட்டமாக நாங் கள் உன்உதவியையும் உன்மன்னிப்பையும் தேடுகிறோம். இன்னும் உன்பேரில் நம்பிக்கை வைத்திருக்கின்றோம் வநத்தவக்கலு அலைக் கவ நுதுனீ அலைக்கல்கைா உன்மீது பொறுப்பு சாட்டுகிறோம். இன் னும் உன்னதவிதமாக உன்னை துதிக்கின்றோம். வநஷ்குருக்க வலாநக் புருக்க வநகுலஉவனத்ருக்க மன்யப் ஜுர்க்க

இன்னும் உனக்கு நன்றி செலுத்துகின்றோம். இன்னும் நாங்கள் மாறுதல்செய்பவர்களல்ல. இன்னும் உனக்கு வழிப்படாதவர்களை நாங்கள் வெறுத்து நீக்கிவிடுகிறோம். அல்லாஹு-ம்ம இய்யாக்க நஉபுது வலக்கனுஸல்லீ ஒ ய் ஆண்டவனே உன்னையே வணங்குகிறோம். இன்னும் உன்னை தொழுகிறோம் வநஸ்ஜு-துவ இலைக்கநஸ் ஆநஹ்பிது வநர்ஜு-ரஹ்மத்தக்க இன்னும் சாஷ்டாங்கம் செய்கிறோம், உன்னிடமே வேகமாக ஓடுகிறோம். நாங்கள் அஞ்சுகிறோம் இன்னும் உன்கிருபையை ஆதரவுவைகின்றோம். வநகுஷா அதாபக்க இன்ன அதாபக்க பில்குப்பாறி முல்ஹிக் உன் வேதனைக்கு பயப்படுகின்றோம். ஏனென்றால் திட்டமாக உன் வேதனை மாறுதல் செய்பவர்களை பற்றிப் பிடித்துக்கொள்ளும். அஸ்ஸலாமு அலைக்கும் வாஹ்மத்துல்லாஹி ஆண்டவனின் ஈடேற்றமும் கிருபையும் உங்கள் பேரில் உண்டாவதாக.

சூரத்துல் பீல்மக்கிய்யா ஆயத்துகள் 5.

பிஸ் மில்லாஹிர்மானிர் ரஹீம். அலம்த்தாகைப பஅல ரப்புக்கபிஅஸ் ஹாபீல்பீல்—யானைக்கூட்டத்தாரை உம்முடைய ஆண்டவன் எக்கெதியாக்கினுனென்று நீங்கள் ஆராயவில்லையா?

அலம்எஜ் அல்கைத ஹு-ம்பீதள்லீலின்—அவர்களின் மோசக்கருத்தை த்வறும்படி அவன் செய்தானல்லவா?

வ அர்ஸல அலைஹிம்தைான் அபாபீல—இன்னும் அவர்கள் பேரில் கும்பல் கும்பலாய் பக்ஷிகளை அனுப்பிவைக்கவில்லையா?

தர்மீஹிம் பிஹிஜாரத்தின்—மின்சிஜ்ஜீலின் அவர்களை கடுமையான பொடிகற்களால் எறிந்து கொல்லவில்லையா?

பஜஅலஹு-ம் கஅஸ் பின்ம உக்கூல்-அவர்களை மெல்லப்பட்ட வைக்கோல்போல் அவன் ஆக்கிவிட்டான்.

சூரத்துல்குரைஷ் மக்கிய்யா ஆயத்துகள்-5.

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர்ரஹிம் லியீலாபி குரைஷின் யீலாபிஹிம் ரிஹ்லதஷஷித்தாயி வஸ்ஸைப் குரைஷி வம்சத்தாரை சினே

கம் செய்வதற்காகவேண்டி அவர்களுக்காக மழை காலத்திலும் வெயில்காலத்திலும் பிரயாணங்களில் சிநேகம் செய்வதற்காகவேண்டி பல்எஉபுதுாப்பஹா தல்பைத்தில்லதீ அத்அமஹூம் மின்ஜூயின் வ ஆமனஹூம் மின்கைவ்ப் அவர்கள் இந்த கஉபாவின் ஆண்டவனே வணங்கிக்கொள்ளவும் இந்த ஆண்டவன் அவர்களின் பசிக்கு உணவளித்தான் இன்னும் பயத்தை விட்டும் அவர்களைகாப்பாற்றினன்.

சூரத்துல் மாஊன்மக்கிய்யா ஆயத்கள்.7

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் அரஅய்த்தல்லதீயுகத்திபுபித்தீன் நீதி தீர்ப்புதினத்தை பொய்யாக்கினவனே நீங்கள் நோட்டமிட வில்லையா? பதாலி கல்லதீ எதுஉல் எத்தீம் இவன் அனாதை குழந்தைகளுக்கு துன்பம் கொடுப்பவனாக இருக்கிறன். வலாயஹூள்ளு அலாத்த ஆமில்மிஸ்கீன் - இன்னும் ஏழைகளுக்கு அன்னம் கொடுக்க ஏவமாட்டான். பவைலுல்னில் முஸல்லீனல்லதீனஹூம் அன்ஸலாத்திஹிம் ஸாஹூன்-ஆதலால் தொழுகையாளிகளுக்கு வைல் என்னும் நரகம் உண்டாயிருக்கிறது. எப்படி தொழுபவர்களென்றால் தங்களின்தொழுகையில் கவனமில்லாது இருப்பவர்கள். அல்லதீன ஹூம் யுராஊன வஎம்னஊ னல்மாஊன் அவர்கள் முகதாக்ஷணியத்தை நாடித்தொழுவார்கள். இன்னும் உபயோகப்பொருள்களை கொடுப்பதை தடுக்கிறவர்கள்.

சூரத்துல் கவ்தர்மக்கிய்யா ஆயத்-3

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.இன்னா அஉதைனகல் கவுதர். திட்டமாக நாம் உங்களுக்கு மேலான ஹவ்லுல் கவுதரின் ஜலத்தைக் கொடுத்து இருக்கிறோம். பஸல்லி லிரப்பிக்க வன்ஹர் ஆதலால் உம்முடைய ஆண்டவனுக்காக தொழுது கொள்ளும் இன்னும் குர்பானி கொடுத்து கொள்வீராக. இன்னஷானி அக்கஹூவல் அப்தர் திட்டமாக உன் பகையனே சர்வ நன்மைகளைவிட்டும் அறுபட்டவனாக இருக்கிறன்,

சூரத்துல் காபிருன் மக்கியா ஆயத்-6

பிஸ்மில்லாஹி. குல்யாஅய்யுகல் காபிருன- (நபியே) நீர் சொல்வீராக விஸ்வாஸ மில்லாதவர்களே. லாஅஉபுதுமாதஉபுதூன நீங்கள் வணங்கும் வஸ்துக்களை நான் வணங்கமாட்டேன். வலா அன்த்தும் ஆபிதூனமா அஉபுது இன்னும் நான் வணங்கும் ஆண்டவனை நீங்கள் வணங்குகிறவர்களுமல்ல வலாஅன ஆபிதும்மா அபத்தும் இன்னும் நீங்கள் வணங்கும் வஸ்துக்களை நான் வணங்குகிறவனுமல்ல. வலா அன்தும் ஆபிதூன மாஅபுது இனிமேலும் நான் வணங்கும் ஆண்டவனை நீங்கள் வணங்குகிறவர்களல்ல. லக்கும் தீனுக்கும் வலியதீன் உங்கள் மதத்தின் பலன் உங்களுக்கு உண்டு. இன்னும் என்மார்க்கத்தின் பலன் எனக்கு உண்டாகும்.

சூரத்துன்னஸர்மதனீ ஆயத்--3

பிஸ்மில்லா. இதாஜாஅ நஸ்ருல்லாஹி வல்பத்ஹு அல்லாவின் உதவியும் ஜெயமும் வந்து விட்டதினால். வரஅய்த்தன்னாஸ எதுகுலூன பீதீனில்லாஹி. அப்வாஜன் இன்னும் அல்லாஹ்வின் மார்க்கத்தில் ஜனங்கள் கும்பல் கும்பலாக வந்து நுழைவதை நீங்கள் பார்ப்பீர்கள். பஸப்பிஹ்பி ஹம்தி ரப்பிக்க வஸ்தஉபிர்ஹு இன்னஹூகான தவ்வாபா. பிறகு உன் ஆண்டவனின் புகழைக்கொண்டு துதிப்பீராக. இன்னும் அவனிடத்தில் மன்னிப்பு தேடுவீராக. திட்டமாக அவன் மன்னிப்பை ஒப்புக்கொள்பவனாக இருக்கிறான்.

சூரத்துல்லஹப் மக்கிய்யா ஆயத்-5

பிஸ்மில்லாஹ் தப்பத்எதா அபீலஹபின் வதப்ப-அபீலஹபின் இருகரங்களும் நாஸ்தியாகக்கடவது. இன்னும் அவனும் நாஸ்தியாகக்கடவான். மாஅகுனா அன்குமாலுகுவமாகஸப அவன் சொத்தும் அவன் சம்பாதித்ததும் அவனுக்கு உபயோகமாகவில்லை. ஸஎஸ்லா நாரன் தாத்தலகபின் அவன் கொழுந்துவிட்டு எறியும் நெருப்பில் பின்னால் சேருவான். வம்ரஅத்துகுஅம்மாலத்தல் அத்தபி இன்னும் விறகுசுமக்கக்கூடிய அவன் பெண்ஜாதியும் பீஜீ

தி ஆஅப்லுன் மிம்மஸது அவளின் கழுத்தில் கட்டப்பட்ட கயறு டன் (நரகத்தில் நுழைவாள்)

சூரத்துல்பலக் மதனீ ஆயத்து-5

பிஸ்மில்லா—குல் அஊதுபி ரப்பில் பலக்கி (நபியே) நீர் சொல்வீராக. விடியற்காலத்தின் ஆண்டவனிடத்தில் நான் காவல் தேடுகின்றேன். மின்ஷற்றிமாகலக்க அவன் சிருஷ்டி பொருள்க ளின் தீங்கைவிட்டும், வமின்ஷற்றின்னப்பாத்தாத்தி பில் உக்கதி.மந் திரத்தின் முடிச்சுகளில் ஓதக்கூடிய வஞ்சனைக்காரர்களின் தீங்கை விட்டும். வமின்ஷற்றி ஆஸிதின் இதாஅஸது பொறாமையின் தீங்கைவிட்டும் இரக்ஷிக்கத் தேடுகிறேன்.

ஐ:4146
180

சூரத்துன்னாஸ் மதனி ஆயத்-6

பிஸ்மில்லா குல் அஊது பிறப்பின்னாஸ் (நபியே) நீர் சொல் வீராக, மனிதர்களுடைய ஆண்டவனிடத்தில் நான் காவல் தேடு கிறேன். மலிக்கின்னாஸ் இலாஹின்னாஸ் மனிதர்களின் ராஜன் மனி தர்களின் ஆண்டவன். மின்ஷாறில் வஸ்வாஸில் கன்னாஸ் மறைந் துகொண்டு கெடுக்கும் ஷைத்தானுடைய தீங்கைவிட்டும் அல்லதீயு வஸ்விஸுபீஸு தூரின்னாஸ் மினல்ஜின்னத்திவன்னாஸ் எப்படிக் கொற்றவனால் மனிதர்களின் இருதயத்தில் கெட்டஎண்ணமுண் டாக்கிறவன் ஜின்னின் ஷைத்தானை விட்டும் மனிதர்களின் ஷைத் தானை விட்டும் இரக்ஷிக்கத்தேடுகின்றேன்.

எல்லா தொழுகைக்கும் ஓதக்கூடிய து-ஆ.

அல்லாஹும்மசல்லி அலாசையதினா முகம்மதின் வஅலா ஆலிமுகம்மதின் வபாரிக்வஸல்லிம் அலைஹி அல்லா ஹும்ம ரப்ப னா ஆத்தினாபித்துன்யா ஹஸனத்தன் வபில்ஆக்கிரத்தி ஹஸத்தன் வக்கினா அதாபன்னா அல்லாஹும்மஷற்றிப்னா பித்தக்வாவஜம்மில் னாபில் ஆபியா வர்ஸுக்னல் ஜன்னத்த யாரப்பல் ஆலமீன் வசலல் லல்லாஹு அலாகைரிகல்கி ஸையதினா முகம்மதின் வஆலிகிவஅஸ் ஹாபிஹி அஜமயீன் சுப்ஹானாரப்பிக்க ரப்பில்இஸ்ஸத்தி அம்மா எகிஃபூன் வஸலாமுன் லல்முர்ஸலீன வல்ஹம் துலில்லாஹி ரப்பீல் ஆலமீன.

முற்றிற்று.

186207
சென்னை-600 008

7A

6-29